**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.155/2025 DW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | அழகம்மை | த–பெ /க.பெ. | சுகுமார் |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 38/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | தனியார் வேலை | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.06.2026**

---

**18.06.2026**
**<u>முதல் விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் எனது தரப்பு ஆவணமான **63(4)(C) BSA சான்றிதழ் எ.ம.சா.ஆ.2** ஆக குறியிடப்படுகிறது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.E.,Eng. படித்துள்ளேன். புகார்தாரரை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 2020 முதல் தெரியும். எனது தந்தைக்கும் புகார்தாரரை தெரியும் என்றால் சரிதான், தந்தை மூலமாகத்தான் புகார்தாரரை தெரியும். வழக்கு காசோலை எனது காசோலை என்றால் சரிதான். ம.சா.ஆ.4 வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். ம.சா.ஆ.4 வழக்கு காசோலையில் உள்ள கையொப்பமும், அதில் பூர்த்தி செய்துள்ள மற்ற விபரங்களும் ஒரே மையினால் நிரப்பப்பட்டது என்றால் சரியல்ல, கையொப்பம் மட்டும் நான் செய்தேன். வழக்கு காசோலைகளில் உள்ள விபரங்களை நான் பூர்த்தி செய்து புகார்தாரருக்கு கொடுத்தேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.2 கடனுறுதிசீட்டில் உள்ள

கையொப்பம் எனது என்றால் சரிதான். ம.சா.ஆ.2 ல் சாட்சிகளாக எனது தந்தை சுகுமார் கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். கடன் தொகை வாங்கிய விபரம் என் தந்தைக்கு தெரியும் என்றால் 2021 ல் தான் ரூ.60,000/- கடன் பெற்றேன் அந்த விபரம் தெரியும். 2021 ல் பெற்றதாக கூறும் தொகையை எந்த எந்த தேதிகளில் திருப்பி செலுத்தினேன் என்றால் 4 தவணைகளாக திருப்பி செலுத்தினேன். 2023 டிசம்பரில் ரூ.20,000/-, 2024 மார்ச்சில் ரூ. 15,000/-, 2024 மேயில் ரூ. 15,000/-, 2024 ஆகஸ்டு ரூ. 10,000/-, ஆகிய காலக்கட்டத்தில் திருப்பி செலுத்திவிட்டேன். வட்டி தொகை எவ்வளவு தொகை என்றால் 3 சதவீத மாத வட்டியாகும். 2021 ல் கடன் பெற்றதாக கூறும்போது வழக்கு காசோலை மற்றும் புரோ நோட் கொடுத்ததாக கூறுகிறேனா என்றால் இல்லை. நான் வழக்கறிஞர் அறிவிப்பு ம.சா.ஆ.6 பெற்றேனா என்றால் பெற்றேன். அதற்கு பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்தேன். பதில் அறிவிப்பு கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, கொடுத்தேன்.

2) ஏற்கனவே பெற்ற கடன் தொகையை கொடுத்துவிட்டேன் என்றும், நான் கொடுத்து வைத்திருந்த காசோலை மற்றும் புரோநோட்டை திருப்பி கேட்டு காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்கு காசோலை மற்றும் புரோநோட் திருப்பி கேட்டு அறிவிப்பு ஏதாவது அனுப்பினேனா என்றால் இல்லை. 21.10.2024 ல் புகார்தாரர் வீட்டில் வைத்து நான் மற்றும் என் தந்தையுடம் வந்து ரொக்கமாக ரூ. 80,000/- கடன் பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த கடனிற்காகத்தான் என் தந்தை சாட்சி முன்னிலையில் ம.சா.ஆ.2 புரோ நோட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1 payment புகார்தாரரின் வங்கி கணக்கிற்கு செய்யவில்லை என்றால் சரிதான், புகார்தாரர் சொன்னதால் அவரது மகனின் வங்கி கணக்கிற்கு அனுப்பினேன். கார்த்திக் சிவா பவுன் ராஜ் வங்கி கணக்கிற்குதான் அனுப்பப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். புகார்தாரருக்கு கார்த்திக் சிவா பவுன் ராஜ் என்று மகன் இல்லை என்றாலும், புகார்தாரருக்கு கார்த்திக் சிவா பவுன் ராஜ் யார் என்றே தெரியாது என்றாலும் சரியல்ல.கார்த்திக் சிவா பவுன் ராஜ் யார் என்று தெரிந்து கொள்ள நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, புகார்தாரர்தான் மகன் என்று கூறினார். 2023 ல்

கார்த்திக் சிவா பவுன் ராஜ் எனக்கு வேண்டபட்ட நபருக்கு பணம் அனுப்பிவிட்டு புகார்தாரருக்கு சார்பாக அனுப்பினேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வேறு ஏதாவது காசோலை வழக்கு என் மீது உள்ளதா என்றால் இல்லை.

3) வழக்கு காசோலை தொகை எதுவும் புகார்தாரருக்கு கொடுத்ததில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளேன். புகார்தாரரிடம் இருந்து கடன் பெற்று அதற்கு ஆதரவாக பிராமிசரி நோட் எழுதிக்கொடுத்துவிட்டு அசல் மற்றும் வட்டியை தீர்ப்பதற்காக வழக்கு காசோலையை கொடுத்துவிட்டு, பணம் இல்லை என்று மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சட்டப்படி தண்டிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.06.18 17:44:45 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
காரைக்குடி.